# இசைப் பாமாலை

கவிஞர்
**அகளங்கன்**



# இசைப் பாமாலை

கவிஞர்

அகளங்கன்

# இசைப் பாமாலை
# ISAIP PAAMALAI


எழுதியவர் :- அகளங்கன். (நா. தர்மராஜா)

AUTHOR :- AGALANGAN. (N. THARMARAJAH)

பதிப்புரிமை :- திருமதி. பூ. தர்மராஜா B. A. (Hons)

COPYRIGHTS :- MRS. P. THARMARAJAH B. A. (Hons)

முதற்பதிப்பு :- ஆவணி 1998

1st EDITION :- AUGUST 1998

அச்சுப்பதிவு :- சுதன் அச்சகம், வவுனியா, இலங்கை.

PRINTERS :- SUTHAN PRINTERS, VAVUNIYA, SRI LANKA.

விலை ரூபா
PRICE Rs. } 40/=


மக்களுக்காக வாழ்ந்து

மரணத்தை வென்ற

வவுனியா ப. நோ. கூ. சங்கத்தின்

தலைவர்

# அமரர் சு. வீரசிங்கம்

அவர்களுக்கு

**சமர்ப்பணம்**

# பொருளடக்கம்

01. நாயகனே - விநாயகனே
02. ஔவைக்குத் தமிழ் தந்த
03. பிள்ளையார் எங்கள் பிள்ளையார்
04. காக்க வேண்டும் நீயே
05. வினைகள் அகல வரந்தரவேண்டும்
06. கலைவாணியே தாயே
07. கருணைப் பெரும் வடிவே
08. நல்வித்தை தந்திடுவாள்
09. அம்மா பராசக்தி
10. அகிலாண்டேஸ்வரியின்
11. குன்றாத இளமையுடன்
12. மயிலேறி விளையாடும்
13. குன்றுதோ றாடிவரும்
14. மலைக்குன்று
15. கோலமயில் ஏறிவரும்
16. நல்லை நகர்ப் பிறந்த
17. விவேகானந்தர் என்னும்
18. பாரதி என்னும் பாவலன் தன்னை
19. பாடுகின்றோம் இன்று
20. காரிகையர் நாங்கள்
21. வாழ்க வாழ்க
22. செந்தாமரைக் குளங்கள்
23. கார்கால மேகத்தைக் கண்டு
24. கண்களில் தெரிவதெல்லாம்
25. விண்ணினைத் தழுவும் மலை
26. சலசலக்கும் ஓசையிலே
27. சேற்று வயல்க் காட்டினிலே
28. எத்தனை கோடி இன்பங்கள்
29. உயர்ந்த மலைகள்
30. ஊரெல்லாம் செழிக்க வேண்டும்
31. வானம் கறுக்கப் போகுது
32. புத்தம் புது வருஷம்
33. தேயிலைத் தோட்டத்துக்கு
34. தை மாதம் பிறந்ததடி
35. வருக வருக புத்தாண்டே
36. உறவுக்குக் கரங்கொடுப்போம்
37. இசைத்திட முடியாது
38. தாயே தமிழே
39. அலைகடல் மணற்பரப்பு
40. மானுடனே உன்



# அணிந்துரை

## சைவப்புலவர் கலைமணி பொன் தெய்வேந்திரன் அவர்கள்

### (ஓய்வு பெற்ற இ. க. நி. சேவை. தரம் இரண்டு)

நீர் வளம் நில வளத்துடன் கார் வளம் கண்டு, களனி பல கொண்டு, மிளிர்வது வன்னி நிலப்பரப்பு. ஆறுகளும் உண்டு அதில் பாறும் கற்களும் உண்டு. அணைகட்டி வெட்டிய குளங்களும் உண்டு. வியத்தகு இயற்கை வளத்தால் தேன்தரும் பல்லின மரங்களும், ஊன்தரும் மெல்லின உயிரினங்களும், காடும் மேடும் கலந்த, நலந்தரும் வயலும் வயல் சார்ந்த நிலமும் இங்குண்டு. அறம் காத்த மறத்தமிழ் வீரன் பண்டார வன்னியன், மக்கள் மனத்தையும் மானத்தையும் தன் வீர கானத்தால் காத்த பெருமையும் இந்நிலத்துக்குண்டு. கன்னல் தமிழின் வளர்ச்சிச்சுவை காணபவர் இங்கு தாராளம்.

இவ்வழியில் தெளிவுடன் தீந்தமிழைத்துறை போகக்கற்று, கவிதை முதல் காவியம், ஆய்வுகள், நாடகம், பாடல்கள், விளக்கவுரை, பொருளுரை, பொழிப்புரை, ஆகியபல் துறைகளிலும் அகலக்கால் பரப்பி நிகரிலாத் தன்மையுடன், வலம்வருபவர், "அகளங்கன்" எனும் தமிழ்மணி நா. தர்மராஜா அவர்கள். இலக்கிய இலக்கணம் மாத்திரமின்றி சைவத்திலும் இம்மண்ணுக்கேற்ற பண்பாட்டுடன் வாழ்பவர். பூமாலைபுனைந்தேத்திப் பாடத்தக்க பாமாலைகள் பல யாத்துள்ளார். பட்டுக்கள் பல சாத்தப்பெற்ற பெருமையால், மக்களுக்காய் பல பாட்டுக்கள் பாடியுள்ளார்கள். இவ்விசைப் பாமாலைப் பாடல்களாவும் பல்கலைக்கழகம் வரை பயிலும் மாணவர்கள், வசதியான இராக தாள அமைவைக் கூட்டுவித்துப் பாடிமகிழ உகந்ததாய் உள்ளது.

இந்நூலில் — பல்வகைச் சந்தங்களிலும் எல்லையிலாச் சிந்தனையில் எழுந்த இசைப்பாடல்கள் வந்தனைக்கும் உகந்ததாய் அமைந்திருப்பது ஓர் தனிச்சிறப்பாகும். இவ்விசைப் பாமாலைத் தொகுப்பில் விநாயகர் வணக்கத்திலிருந்து தேவி வணக்கம் வரை பாடப் பெற்ற பாடல்களை எண்ணிய முறையில் பாட நண்ணியவர்களுக்கு கண்ணியமான பலன் கிடைக்கும் என்பது உறுதி. இவ்வாசிரியர் ஏற்கனவே இருபது நூல்கள் வரை ஆக்கியுள்ளார். இவற்றிற்கு தேசிய சாகித்திய மண்டலப்பரிசு வரை பல பரிசுகளும் பெற்றுள்ளார். ஈற்றில் 'செந்தமிழும் நாப்பழக்கம்' எனும் நூலைத் தலைமையேற்று வெளியிட்டு வைக்கும் பேறு எனக்குக் கிடைத்தது.

இவ்இசைப் பாமாலையில் இறைவழி சென்ற மறைஞான முனிவர்கள் எனப்படும் விவேகானந்தர், விபுலானந்தர், நாவலர், பாவலர், பாரதி, மாத்திரமின்றி, கிராமியவகைப் பாடல்களாகிய கரகம், கோலாட்டப் பாவடிகளெல்லாம் பரிணமிக்கின்றது. இயற்கை எழிலும், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் கரங்களாய் களனி படைக்கும் உத்தம மக்களையும் பயிர் நாட்டி உயிர்காக்கும் உன்னத முயற்சியாளர்களின் முறுவல்களையும், தெம்மாங்குநுண்கலைப் பாடல்களையும் தலைகாட்ட வைத்திருக்கின்றார்கள்.

செந்தமிழும் தீந்தமிழும் உவந்தளித்து இன் தமிழால் என்னைப் பாட வைத்தாய் எனத்தமிழ்த் தாய்க்கும் இதை வாய்ப்பாக்கி வாழ்த்தாய் எழுதியதும் சிறப்பாகும். எல்லாப் பாடல்களும் தாளத்துக்கு அமைவதாய் இருப்பதும் பாடல் இசைப்போரை இலகுவாக்குகிறது. அகளங்கன் தன் படைப்புகளுக்குப் பெற்ற பரிசில்களோ அனேகம். அகளங்கன் அவர்களுடைய இவ்வரிய முயற்சி பெரிய வளர்ச்சியாய் வருங்காலச் சந்ததியினருக்கு வழிகாட்டும். என்பது ஐயமின்றித் தெளிவாகின்றது என்பதை நினைத்துக் களிப்படைகின்றேன். திரிபுரமெரித்த விரிசடைப் பெருமானினதும், பெருமாட்டியினதும் பெருங்கருணை 'இவருக்கு என்றும் பொழிவதாக' என ஆசிகூறி வாழ்த்துகிறேன்.

பண்டாரிகுளம், **பொன் தெய்வேந்திரன்**
வவுனியா.



# முன்னுரை

இலங்கை வானொலிக்கான மெல்லிசைப் பாடல்கள் சிலவற்றைக் கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன் எழுதத் தொடங்கினேன். அதைத் தொடர்ந்து இன்று வரை பல்வேறு தேவைகளுக்காகவும் பல இசைப் பாடல்களையும் எழுதி வருகிறேன்.

இவற்றில் இலங்கை வானொலியில் சில மெல்லிசைப் பாடல்கள் ஒலித்தன. ஒலிக்கின்றன. குறிப்பாகச் 'சேற்று வயல்க் காட்டினிலே...' என்ற எனது மெல்லிசைப் பாடல் தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர் மெல்லிசை மன்னர் இராமமூர்த்தி (விஸ்வநாதன் – ராமமூர்த்தி இரட்டையரில் ஒருவர்) அவர்களின் இசையில் பெரும் புகழ் பெற்றது. எனக்குப் பெரிதும் உற்சாக மூட்டியது. இதற்குக் காரணமாக அமைந்த அருணா செல்லத்துரை அவர்களுக்கும், பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், இலங்கை வானொலி நிலையத்தாருக்கும் என்றும் என் நன்றிகள் உரியன.

எனது சில மெல்லிசைப் பாடல்கள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன. அத்தோடு தமிழ்த் தினப்போட்டிகளிலும், மாவட்ட, மாகாணமட்டப் பரிசுகளை வென்றிருக்கின்றன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய இசைப் பாடல் போட்டிகளில் எனது சில பாடல்கள் முதற் பரிசை வென்றிருக்கின்றன. கலாபூஷணம் திருமதி. விமலலோஜினி கனகேஸ்வரன் அவர்களின் இசையில் அவரது மகள் செல்வி துகாரதி அவர்கள் பாடிய 'எத்தனை கோடி இன்பங்கள் வைத்தாய்' என்ற பாடல் முதற் பரிசையும் பெரும் பாராட்டையும் பெற்றதை இங்கு குறிப்பிடலாம்.

இத்தொகுப்பிலுள்ள சில பக்திப் பாடல்கள் இசையெழில் க. கனகேஸ்வரன் அவர்களாலும் அவரது மகள் செல்வி துகாரதி அவர்களாலும் இசைக் கச்சேரிகளில் பாடப்படுகின்றன. அவர்களுக்கு என் நன்றிகள்.

மற்றும் பல பாடல்கள் வவுனியாவிலுள்ள பல பாடசாலைகளில் பல்வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கரகாட்டப்பாட்டு, கோலாட்டப்பாட்டு, என்பவை ஆடுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குழுப்பாடல்கள் பல பாடப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தியோருக்கும் என்னை எழுதத் தூண்டியோர்களுக்கும் என்றும் என் நன்றிகள் உரியன.

மாணவர்களின் சங்கீத பாடப்பரீட்சை, தமிழ் மொழித் தினப்போட்டி மற்றும் தேவைகளுக்குப் புதிய ஆக்கங்கள் தேவைப்படுகின்றன. அவற்றை நிறைவு செய்யப் புதிய ஆக்கங்கள். பல வெளிவர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் எனது இசைப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து 'இசைப்பாமாலை: யாக்கித் தமிழன்னைக்குச் சூட்டுகிறேன்.

இவ் இசைப் பாமாலையிலுள்ள பல பாடல்களை இசையமைத்து மேடையேற்றிய கலாபூஷணம் திருமதி விமலலோஜினி கனகேஸ்வரன் அவர்களுக்கு என் நன்றிகள்.

எனது 'அகளங்கன் கவிதைகள்' நூலுக்கு வடக்குக் கிழக்கு மாகாண இலக்கிய நூற்பரிசு (1996) கிடைத்த மகிழ்ச்சி இந்நூலை வெளியிடப் பெரிதும் துண்டுதலாக இருக்கின்றது. தேர்வுக் குழுவினருக்கு என் நன்றிகள்.

இந்நூலுக்கு நல்லதொரு அணிந்துரையை வழங்கி நூலுக்கு அணிசேர்த்த என் அன்புக்குரிய சைவப் புலவர் கலைமணி பொன். தெய்வேந்திரன் ஐயா அவர்களுக்கு என் நன்றிகள் என்றும் உரியன.

இந்நூலாக்கத்துக்குப் பெரிதும் உதவிய நண்பர்கள் திரு. செ. சண்முகநாதன், திரு. பி. மாணிக்கவாசகம், திரு. ஓ. கே. குணநாதன், ஆகியோருக்கும் இந்நுலை அழகாக அச்சிட்டுத் தந்த சுதன் அச்சகத்தாருக்கம் என் நன்றிகள்.

என்உயிர் மூச்சாக விளங்கி இந்நுலை வெளியிடுவதிலும் முழுமூச்சாக உதவிய என் மனைவிக்கும், வழமைபோல என் நூலாக்க முயற்சிகளுக்கு உறுதுணையாக விளங்கி என்னை உற்சாகப்படுத்தும் என் தம்பி க. குமாரகுலசிங்கத்திற்கும் என்றும் என் நன்றிகள் உரியன.

இவ் இசைப்பாடல்களை சிறந்த முறையில் இசையமைத்துச் சிறந்த முறையில் பாடப் போகின்ற அனைவருக்கும் என் நன்றிகள்.

பம்பைமடு, வவுனியா.

அன்பு
அகளங்கன்

15-09-1998

## 01

உ

நாயகனே - விநாயகனே
ஞானவடி வாயிருக்கும்
ஆனைமுகத் தாரமுதே. (நாயகனே)

தேனிருக்கும் மலர் மாலை
ஊனுருக்கும் கவி மாலை
நானிருந்து சூட்டிடுவேன்
ஞானம் எனக் கூட்டிடுவாய். (நாயகனே)

அசுரர்களைக் கொன்றொழித்தாய்,
அமரர்கட்கு வாழ்வளித்தாய்,
பசுமரத்தின் கீழிருந்து
பக்தர்களைக் காத்தருள்வாய். (நாயகனே)

நம்பிக்கை கொண்டவர்க்கு,
நம்பிக் கைகொடுத்தருளும்,
தும்பிக்கை நாயகனே,
தூய கணபதியே. (நாயகனே)

பக்தர்கள் வரிசைகோடி,
பலர் உன்னை வாழ்த்திப்பாடி,
சர்க்கரைப் பொங்கல் வைப்பார்,
சர்வநா யகன்நீஎன்பார். (நாயகனே)

உனை வணங்கும் அடியவர்க்கு,
ஒருநாளும் துன்பமில்லை,
உமைபாலனே கணேசா
உனை நம்பினேன் அருள்தா. (நாயகனே)

உ

ஔவைக்குத் தமிழ் தந்த
ஆனை முகத்தவனே,
இம்மைக்கும் மறுமைக்கும்
எமைக்காக்கும் கணபதியே.

(ஔவை)

துன்பங்கள் தொடர்கதையோ,
துயரங்கள் நெடுங்கதையோ,
அன்பர்கள் நிலையிதுவோ,
அருள்தர மனம்இலையோ.

(ஔவை)

பாபங்கள் போக்கஉந்தன்
பாதங்கள் நாம்பணிந்தோம்,
சாபங்களோ எமக்குச்
சகதியில் விழுந்துவிட்டோம்.

(ஔவை)

தும்பிக்கை யானேஉன்னைத்
துணையென எண்ணிவந்தோம்,
நம்பிக்கை வைத்தஎம்மேல்
நம்பிக், கை வைத்தருள்வாய்.

(ஔவை)

அசுரர் குலம் அழித்த
ஆனை முகத்தவனே,
பசுபதி உலகுக்கீந்த
கணபதி காப்பாய் நீயே.

(ஔவை)







உ

பிள்ளையார் எங்கள் பிள்ளையார் - பென்னம்
பெரிய வயிறுடைய பிள்ளையார்.

(பிள்ளை)

அன்னையார் உமா தேவியாம் - அவர்
தந்தையோ பெரும் ஞானியாம்.

(பிள்ளை)

தம்பியார் குக பாலனாம் - சூர
சங்காரம் செய்த வேலனாம்.

(பிள்ளை)

ஞானமே வடி வானவர் - பெரும்
யானைபோல் முகம் ஆனவர்.

(பிள்ளை)

மோதகந் தனை உண்ணுவார்-பெரும்
பாதகங் களைத் தள்ளுவார்.

(பிள்ளை)

போட்டிக்கு வலம் வந்தவர் - ஔவைப்
பாட்டிக்குத் தமிழ் தந்தவர்.

(பிள்ளை)

துன்பங்கள் தனைப் போக்குவார் - சுக
இன்பங்கள் தனைத் தேக்குவார்.

(பிள்ளை)

நம்பிக்கை வைப்போம் வாருங்கள் - எங்கள்
தும்பிக்கை யானைச் சேருங்கள்.

(பிள்ளை)

பிள்ளையார் பெயர் சொல்லுங்கள் - பெருந்
தொல்லைகள் தனை வெல்லுங்கள்.

(பிள்ளை)

## 04

உ

காக்க வேண்டும் நீயே - எங்கள்
கணபதி என்னும் தேவே.

(காக்க...)

பார்க்கும் இடங்கள் யாவும் - பெரும்
பாவச் செயல்கள் மேவும்.

(காக்க...)

ஆர்க்கும் துன்பம் பொதுவாம் - நாம்
அன்லில் விழுந்த புழுவாம்.
காக்கும் கடமை உனதே - எம்மைக்
காக்க வேண்டும் இனிதே.

(காக்க...)

பூக்கள் மலர்ந்த துனக்காம் - அவை
புயலில் சிதறல் இழுக்காம்.
தேக்கும் அருளைப் பொழிவாய் - இந்தத்
தேசம் நிறைந்து ஒளிர்வாய்.

(காக்க...)

துன்பம் எமது உறவோ - கொடுந்
துயரம் எமது கனவோ.
இன்பம் எமது பகையோ - நீ
இருந்தும் இந்த வகையோ.

(காக்க...)

அன்பும் அறமும் நிலைக்க - இந்த
அகிலம் அதிலே செழிக்க,
என்பும் உருகத் தொழுதேன் - உனை
எண்ணி எண்ணி அழுதேன்.

(காக்க...)



## 05

உ

### பல்லவி

வினைகள் அகல வரந்தர வேண்டும்.
விநாயகனே உந்தன் அருள்மழை வேண்டும்.

### அனுபல்லவி

மனைகள் பொலிந்து மகிழ்வுற வேண்டும்
மானிலம் எல்லாம் மதிப்புற எழுந்து

### சரணம்

ஆனை முகனெழில் அருள்மழை தோன்றி
ஆதி வினையற அருள்தர வேண்டும்.
ஞானக் கடலினில் அருள்அலை தோன்றி
ஞாலம் மகிழ்வுற நல்குதல் வேண்டும்.

(வினை...)

பாச வினைகளே பாறிட வேண்டும்.
பாவ நிலையென்றும் மாறிட வேண்டும்
நேச முனதன்றி வேறென்ன வேண்டும்.
நேய நினைவுகள் யாரினில் தோன்றும்.

(வினை...)

ஆதி முதல்வனே ஆனந்தம் வேண்டும்.
ஆசி அருளியெனை ஆட்கொள்ள வேண்டும்.
சோதிச் சுடரொளிச் சொருபமே கண்ணில்.
சோர்வு பிறக்குமோ இனியிந்த மண்ணில்.

(வினை...)

உ

கலை வானியே தாயே - கருணைக்
கடல் தான்நீயே அம்மா.

(கலை...)

அலை மோதும் கரைமீது
மணல் போலவே - துன்பம்
மலை போலக் குவிந்தாலும்
துணை தான் நீயே.

(கலை...)

கொலை வாள்போல் அறியாமைக்
குழி நீந்தியே - இன்பம்
நிலை யாய்உன் நினைவாய்நான்
நிதம் வாழவே.

(கலை...)

அறி யாமை என்நெஞ்சம்
அறி யாமையாய் - கலைகள்
தெரி யாமை இன்றோடு
தெரி யாமையாய்.

(கலை...)

என் நாவில் நீவந்து
உறைந் தாலென்ன - இனி
வெண் தாம ரைப்பூவை
மறந் தாலென்ன.

(கலை...)







உ

கருணைப் பெரும்வடிவே கலைமகளே....
கைகூப்பினேன் உந்தன் திருவடியே!
அருளைத் தரும்வடிவே அடிமையெந்தன்....
அறிவில் உறைந்திடுவாய் அழகுறவே.

(கருணை..)

கம்பன் கவிதையிலே அமர்ந்து கொண்டாய்
கருத்தாய் திருக்குறளில் விருப்புக் கொண்டாய்.
இளங்கோ தந்தபுதுச் சிலம்பு கொண்டாய்.
இளம்பா ரதிப்புதுமை ஏற்றுக் கொண்டாய்.

(கருணை..)

அகமும் புறமும்நீயே அறிந்து கொண்டேன்.
ஔவைத் தமிழும்நீயே தெரிந்து கொண்டேன்.
இகபரம் தருமெங்கள் பக்திக் கவி
இசையும் நீயேதான் உணர்ந்து கொண்டேன்.

(கருணை..)

அலைகளின் ஆடலிலே நட மிடுவாய்
அருவியின் ஓசையிலே பதம் பிடிப்பாய்
கலைக்குயில் பாடலிலே இசை தருவாய்
கவிதரும் போதையிலே அசைந் திடுவாய்

(கருணை..)

நானுன்னை அறிந்து கொண்டேன் நாயகியே
நலந்தரும் கவிதைதர நானறி யேன்
தாயுந்தன் பாதங்களைச் சரண டைந்தேன்
தமிழ்தந்து எனை அணைப்பாய் சரஸ்வதியே

(கருணை..)

உ

நல்வித்தை தந்திடுவாள்
நாவில்க் குடியிருப்பாள்
கல்விக் கதிபதியாம்
கலைமகளைப் போற்றிடுவோம்.

பாரதி அவள்பெயராம்
பாருலகுக் கவள்கதியாம்
தாரணி போற்றுகின்ற
சரஸ்வதியைப் போற்றிடுவோம்.

வாக்கில் நிறைந்திருப்பாள்.
வல்லமைகள் தந்திடுவாள்.
நாக்கில் குடியிருக்கும்
நாமகளை வணங்கிடுவோம்.

கல்விக் கதிபதியாம்
கலைமகளைச் சரணடைந்தால்,
நல்வித்தை எல்லாமும்
நமக்கவளே தந்திடுவாள்.

வெள்ளைத் துகிலணிந்து
வீணையொன்றைக் கையணைத்து
வெள்ளைக் கமலத்திலே
வீற்றிருந்து அருள்புரிவாள்.

குயிலின் குரலினிலே
குடியிருந்து இனிமைதந்து
மயிலின் நடனத்திலே
மகிழ்ச்சியுடன் உறைந்திடுவாள்.

அலைகளின் அசைவுகளில்,
அருவியின் சலசலப்பில்,
மலைகளை வந்துமூடும்
மழைமுகிலின் அழகுகளில்

வீணையின் நரம்பினிலே
வேய்குழல் நாதத்திலே
ஊனையும் உருக்கிவிடும்
உயர்ந்தநல்ல பாடலிலே

குடியிருக் கும்அவளைக்
கும்பிட்டுப் போற்றிநாங்கள்
அடிபணிந்து தீபம்
அழகுறவே ஏற்றிடுவோம்





உ

**அம்மா பராசக்தி ! - இந்த**
**அவனியில் நானுந்தன் மகனல்லவோ - என்**
**அவலங்கள் தீர்ப்பதுன் கடனல்லவோ - இதை**
**அறிந்திடா திருப்பதுன் தவறல்லவோ.**

**(அம்மா!)**

**தாயென்று நானுன்னைச் சரணடைந்தேன் - உன்**
**தாள்களே கதியென்று உனையடைந்தேன் - மனத்**
**தாபங்கள் தீர்த்தெனைக் காத்திடம்மா - உனைத்**
**தாயென்றேன் நீயள்ளிச் சேர்த்திடம்மா**

**(அம்மா!)**

**தலைவிதி மாற்றஉன் தாழ்பணிந்தேன் - இந்தத்**
**தரணியில் பாவியாய் நான் கனிந்தேன் - பெரும்**
**மலையினை என்சிறு தலையில் வைத்தாய் - கடல்**
**மணலிலும் சோதனை அதிகம் வைத்தாய்**

**(அம்மா!)**

**துன்பத்தை நானென்று விதைவிதைத்தேன் - என்று**
**துயரெனும் நீர்பாய்ச்சி எருவுமிட்டேன் - என்**
**இன்பத்தைக் களையென்று களைந்துவிட்டாய் - நான்**
**இழிவுற்று வாழ்விலே களைத்துவிட்டேன்**

**(அம்மா!)**

**மானிலம் காப்பதுன் கடமையென்றால் - இந்த**
**மானிடன் வாழ்வினை ஏன்மறந்தாய் - இனி**
**நானிங்கு யாரிடம் சரணடைவேன் - உன்னை**
**நம்பினேன் என்னையேன் நரகில்விட்டாய்**

**(அம்மா!)**

உ

அகிலாண் டேஸ்வரியின் அருகிருந்தே அருளும்
அகிலாண் டேஸ்வரரே - அன்னை

வன்னிவள நகரில் வளம்சேர் பதியாகி
எண்ணமெ லாம்நிறையும் கோவிற்குளம் அதனில்
(அகிலா...)

என்னுயிர் உடலாகி எழிலுரு முதலாகி
இன்னல்க ளைப்போக்கும் எம்பெரு மான்நீயே
(அகிலா...)

கண்ணினில் ஒளிநீயே கருத்தினில் நிறைவாயே
உண்ணஅ ரியபெரும் உத்தம மாம்மருந்தே
(அகிலா...)

பண்ணினில் உனைப்பாட பதமெனக் கருள்வாயே
வண்ணநி லவசையும் வளர்சடைப் பெருமானே
(அகிலா...)

பன்னிரு திருமுறையில் பரவும்மெய் யடியார்கள்
உன்னிரு திருவடியை உருகி நினைந்தனரே
(அகிலா...)

மின்னல் சடையசைய மிளிர்கொன்றைப் பூவசைய
கன்னல்இ தழ்அசைய களிநடம் இடும்இறையே
(அகிலா...)







உ

குன்றாத இளமையுடன் குமரன் - மலைக்
குன்றுகளில் ஆடி வருகின்றான்.
நின்றாலும் இருந்தாலும் நினைவில் - என்றும்
நீங்காமல் ஓடி வருகின்றான்.
(குன்றாத)

சூரர் தொகையினுக்குக் காலன் - அன்னை
தோளில் விளையாடும் வேலன்.
பாரோர் தொழுதேத்தும் பாலன் - வள்ளி
பாகம் அணையும்மண வாளன்.
(குன்றாத)

காலக் கடும்புயலில் வாடும் - மனம்
கவலைகள் தீர்க்கவழி தேடும்.
நீலக் கதிரமலை கூடும் - கந்தன்
நினைத்தால் வினைகள் பறந்தோடும்.
(குன்றாத)

தீராத வினைகளென்னும் தொல்லை - கங்கைத்
தீரத்தத்தில் ஆடியபின் இல்லை.
வாயார முருகனென்ற சொல்லை - சொன்னால்
வருமே சுகங்களுக்கு எல்லை.
(குன்றாத)



உ


மயிலேறி விளையாடும் முருகா - எந்தன்
மனமேறி விளையாடும்
எழில்ஞான குமரா
(மயிலேறி)

மயலாகி உலகாசை
மனதான வாடும்
செயலாகித் தடுமாறும்
சிறியேனின் மனம்நாடும்
(மயிலேறி)

குயிலாக நான்மாறி
குமராவுன் எழில்பாடி
பயிலாத ஞானத்தின்
படியேறி வருவேனே
(மயிலேறி)

கலிகால வரதாஉன்
கழல்பாடும் அடியாருள்
வலியேனோ அறியேனே
வழிகாட்டி அருள்கூட்டு
(மயிலேறி)

பணியாத மனத்தோடு
பழமின்றிச் சினத்தோடு
தணியாத கோபத்தில்
தனியான நிலையான
(மயிலேறி)







உ

குன்றுதோ றாடிவரும் குமரன் - எங்கள்
மன்றுதோ றாடிவர வேண்டும்
தென்றலோ டாடிவர வேண்டும் - பேசுஞ்
செந்தமிழோ டாடிவர வேண்டும்.
(குன்று...)

திங்களோ டாடிவிளை யாடி - வீசுந்
தென்றலோ டுடிமனம் வாடி
எங்களோ டாடிவர வேண்டும் - முருகா
இன்பமே கோடிதர வேண்டும்.
(குன்று...)

கார்த்திகைப் பெண்கள் இங்கே
காத்திருக் கின்றாரையா
வார்த்தையில் மழலைதர வேண்டும் - எங்கள்
வாசலில் தவழவர வேண்டும்
(குன்று...)

சரவணப் பொய்கை எங்கள்
சந்தண இதயத்தொட்டில்
குருபரன் ஆசிதர வேண்டும் - மலராம்
இருகரம் வீசிவர வேண்டும்.
(குன்று...)



உ

மலைக் குன்று தனில்நின்று
மயில் ஆடுமே - அந்த
நிலை கண்டு களிகொண்டு
நிதம் பாடுவேன்

(மலைக்...)

கலைக் குன்று எனஅன்று
தமிழ் ஆய்ந்தவன் - சூரர்
கொலைக் கென்று வேல்கொண்ட
குமரன் தனைத்தேடி

(மலைக்...)

போட் டிக்கு உலகத்தை
வலம் வந்தவன் - ஔவைப்
பாட் டிக்குக் கனிதந்து
தமிழ்தந்த வனைத் தேடி

(மலைக்...)

மயில் வாகனந் தன்னில்
மனங் கொண்டவன் எந்தன்
மன ஆசனந் தன்னில்
நிறைந்துள்ள வனைத்தேடி

(மலைக்...)

அருணை கிரிக் கன்று
அருள் செய்தவன் - தன்
கருணை விழி மலர்ந்து
கவிகேட்ட வனைத்தேடி

(மலைக்...)







உ

கோலமயில் ஏறிவரும்
குமரன் குடிகொண்ட
ஞாலமெல்லாம் புகழும் நல்லூர் புவி
நாற்றிசையும் புகழ்பரப்பும் நல்லூர் - இந்த
நானிலத்தில் இதற்குஇணை இல்லை

(கோல...)

மாவிட்ட புரந்தன்னை
மனம் விட்டுப் பாடினால்
பாவங்கள் விட்டோடுமே - கந்தன்
கால்தொட்டுப் பணிவோர்கள்
மேல் தொட்ட வினையெல்லாம்
வேல் தொட்ட பகையாகுமே

(கோல...)

சந்நிதானத்திலே
சந்ததமும் மனமுருகி
சதிராடும் பக்தவெள்ளம் முருகன் -
முன்னிதானத்துடன்
முறையோடு வணங்கினால்
முடியாத முடிவெய்தலாம் - செல்லச்
சந்நிதானத்திலே

(கோல...)

பாலாவிக் கரைதனிலே
கோலோச்சும் ஈசனின்
பாதங்கள் நம்சொந்தமே - என்று
பற்றினால் பற்றினைப்
பற்றாத பற்றுக்கள்
பறந்தோடும் இது திண்ணமே!
திருக்.....
கேதிச்சர் ஆலயம்
கேட்டாலும் பேர்தன்னைக்
கேடுகள் பறந்தோடுமே - மனம்
கேடில்லா நிலை எய்துமே

(கோல...)

கோணேசர் குடிகொண்ட
திருமலையில் தலைவைத்து
அருமறைகள் ஓதிவந்தால் மனம்
ஒருநிலையில் ஈசனை
அனுதினமும் எண்ணினால்
அழியாத செல்வமாகும் - வாழ்வில்
ஒழியாத மேன்மையாகும்

(கோல...)

கதிர்காம வேலவன்
கழலடி இறைஞ்சிஇரு
கண்ணீர் வழிய நிற்போம்
எதிர்காலம் நன்மையே
எழிலான வாழ்வுவரும்
ஏற்றம் முன் னேற்றம் வருமே

(கோல...)

உ

பல்லவி

நல்லை நகர்ப் பிறந்த நாவலரே! - புகழ்
எல்லை தனைக் கடந்த காவலரே!

அனுபல்லவி

தொல்லை துயர் நிறைந்த கானத்திலே - மண
முல்லை என முகிழ்த்த மூலவரே
(நல்லை...)

சரணம்

செந்தமிழ்த் தாயின் துயர்
தெரிந்து அதை அகற்றி
நந்தமிழ் நானிலத்தில்
நலம்பெற வே உழைத்த
(நல்லை...)

சைவமாஞ் சமயம் மாழச்
சதிசெய்தோர் எண்ணம் மாழத்
தெய்வமாய்த் தோன்றிச் சைவத்
தெளிவினை உலகிற் கீந்த
(நல்லை...)

பேச்சிலே நிகரில் லாமல்
பிரசங்க மாரி பெய்து
மூச்சிலே சைவ மேன்மை
முன்னேற்றம் கண்டு வாழ்ந்த
(நல்லை...)

ஐந்தாம் குரவர் என்று
அகிலமும் போற்றும் சைவத்
தந்தாய் உமது புகழ்
தமிழழ விற்கும் மேலாம்
(நல்லை...)





உ

விவேகானந்தர் என்னும் மகானை - சமய
வேற்றுமை மறந்தொன்றாய்ப் போற்றிப் புகழ்வோம்
(விவேகா)

கல்கத்தா எனும் நகரில் பிறந்தார் - நல்ல
கல்வி அறிவினால் பெரியோனாய்ச் சிறந்தார்.
பல்வேறு சமய உண்மை அறிந்தார் - இந்தப்
பார்போற்றும் ஞானியாய் உலகில் திகழ்ந்தார்.
(விவேகா)

மனிதர்கள் எல்லோரும் சமமே - சமய
மார்க்கங்கள் சொல்பவைகள் எல்லாமும் நலமே.
தனியாக வேற்றுமைகள் பேசில் - இந்தத்
தரணியிலே சண்டைகள் குழப்பங்கள் ஓங்கும்.
(விவேகா)

நதிகள் பலஓடி னாலும் அவை
நாடும் இடம் முடிவில் நல்லதோர் கடலே
விதிகள் பலவாகி னாலும் சமய
வீதிகள் முடியுமிடம் என்றுமோர் இடமே
(விவேகா)

உலகில் மார்க்கங்கள் பலவாம் - அவற்றில்
ஒற்றுமை ஏற்படில் எல்லாமே நலமாம்.
கலகம் மானிடரைக் கொல்லும் - எந்தக்
கடவுளும் கொல்லென்று சொல்லுவது இல்லை.
(விவேகா)

அன்பினால் ஒற்றுமையாய் வாழ்வோம் - நாம்
அனைத்து மதங்களையும் நட்போடு பார்ப்போம்.
துன்பம் இல்லாத நிலையில் - என்றும்
தூயநல் வாழ்வுக்கு இறையருளைக் கேட்போம்.
(விவேகா)

என்று அறிவுரைகள் தந்து - மிகவும்
எழிலாய் அமெரிக்கச் சிக்காக்கோ நகரில்
அன்று சர்வமத மகாசபையில் சொன்ன - நல்ல
அறிஞன் விவேகானந் தன்வழியில் செல்வோம்
(விவேகா)

உ

பல்லவி

பாரதி என்னும் பாவலன் தன்னைப்
பாடிநாம் புகழ்ந்திடுவோம் - என்றும்
(பாரதி)

அனுபல்லவி

புகழ்மிகு புலவனாய் புதுமையின் அதிபனாய்
புதுயுகம் படைத்தவன் புவியினில் நிலைத்தவன்
(பாரதி)

சரணம்

பாஞ்சாலி சபதமும் பல்வகைப் பாடலும்
நாஞ்சேர்ந்து பாடும் நற்றமிழ் வாழ்த்தும்
பூஞ்சோலைக் குயிலும் புகழ்க்கண்ணன் பாட்டும்
தீஞ்சுவைத் தமிழினில் திளைத்திடத் தந்தோன்
(பாரதி)

புதுமையின் ஊற்றுப் புதுத்தென்றல்க் காற்று
புவியினில் அவனுக்கு இணையெது சாற்று.
முதுமையைக் காணான் மூடரைப் பேணான்
மூவுல கிலும்புகழ் நாட்டியே போனான்.
(பாரதி)

முறுக்கிய மீசை முண்டாசுப் பாகை
முதிர்ந்ததோர் கோட்டுத்தன் உடலினில் போட்டு
சுறுக்கென நடக்கும் நடையுமோ மிடுக்கு
சுந்தரத் தீங்கவி முழுதுமே கிடக்கும்
(பாரதி)







உ

பல்லவி

பாடு கின்றோம் இன்று புதுப் பாட்டு - தமிழ்ப்
பா வலன் விபுலா னந்தனின் புகழ் கேட்டு

அனுபல்லவி

நாடு புகழ் அறிஞன் நந்தமிழ் வித்தகனைக்
கூடும் அன் பினில்ப் புகழ்ந்து
கூடியே சேர்ந்து நின்று
(பாடு...)

சரணம்

மீனிசை பாடும் மட்டு நகரினிலே பிறந்த
தேனிசைத் தமிழ்த் துறவி தென்றலின் மறுபிறவி
நாமிசை பாடுதற்கு நல்லதோர் பொருள் எனவே
பூமிசை வந்துதித்த புலவனைப் போற்றி நன்றாய்ப்
(பாடு...)

உள்ளக் கமலம் ஒன்றே உத்தமனார்க் கேற்றதென்று
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் தெரிந்து
தெள்ளு தமிழ் இசையில் தீந்தமிழ்ப் பாடல்நெஞ்சை
அள்ளும் படிதந்த அறிஞன் புகழ் வியந்து
(பாடு...)

யாழ்நூ லொடு மதங்க சூளாமணி என்னும்
ஏழ்இசை நாடக நூல் இயற்றி எமக்களித்து
சூழ்கலி நீங்கி மாந்தர் சுகம்பெறத் தத்துவமாம்
ஆழ்கடல் முத்தெடுத்து அளித்தவன் செயல் நினைந்து
(பாடு...)

ஒப்பியல் இலக் கியமும் உயர்சைவ இலக்கியமும்
இப்புவி எங்கு முள்ள எழில்மிகு இலக்கியமும்
எப்பொழு தும்இனிக்கும் எம்தமிழ் மொழியில் தந்த
விற்பனன் பிறந்த நூறாம் ஆண்டு விழாவினிலே
(பாடு...)

உ

## கரகாட்டப்பாட்டு

காரிகையர் நாங்கள் கூடுவோம் - எங்கள்
காலிற் சிலம்புகள் போடுவோம்
பேரிகை ஓசை முழுங்கிட - நல்ல
பெருமை யொடுகரகம் ஆடுவோம்

(காரிகை..)

வேறு

வேப்பிலை கையில் கொண்டு
விரதம் இருந்து கொண்டு
காப்பினை வேண்டி நாங்கள்
காளியம் மனைத் தொழுவோம்

(வேப்பிலை..)

நாடு செழித்திட வும்
நல்ல் மழை பெய்திடவும்
வீடு களித்திட வும்
வேண்டி நாம ஆடிடுவோம்

(வேப்பிலை..)

வேறு

ஆடிவருவோம் கரகம் ஆடிவருவோம்
ஆனந்தம் பொங்க என்றும் ஆடிவருவோம்.
பாடிவருவோம் நாங்கள் பாடிவருவோம்
பாரெல்லாம் வாழ வாழ்த்துப் பாடிவருவோம்

(ஆடிவரு..)

வேறு

அம்மனைப் போற்றி நாங்கள்
அடியெடுத்து ஆடி வந்தால்
எம்மனை மக்கள் செல்வம்
எல்லாம் சிறந் திடுமே

(அம்ம..)

நோய்நொடி நீங்க வேண்டும்
நோன்புகள் ஓங்க வேண்டும்
தாய்என் எங்களை நீ
தாங்கிட வேண்டும் அம்மா

(அம்ம..)

வேறு

பாதச் சிலம்புகள் பண்ணொலி தந்திடப்
பாரினைக் காத்திட வருவாள்
கீதம் இசைத்திடும் கைவளை ஆடிடக்
கிளரொளி வீசியே வருவாள்

வேறு

கலகலென ஒலி நிறையப்
பளபளென ஒளி பெருகக்
கண்கள் இரு சூரியனாய்க்
கால்கள் புயல் மாருதமாய்
வருவாள்... வரம் தருவாள்

வேறு

இத்தரையில் எத்திசையும்
முத்திபெறும் பத்தியினால்
இறைஞ்சி வழிபட
இரங்கி அருள்தர
வருவாள்.... வரம தருவாள்.





உ

## கோலாட்டப்பாட்டு

வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழ்க! வாழ்க! செந்தமிழாம் அன்னையவள்
பாதம் வாழ்க!
வாழ்க! வாழ்க!

எங்கள் மொழி உலகினிலே இனிய மொழியே
என்று நாங்கள் கோல்கள் கொண்டு
இன்று ஆடோமோ... ஓ... ஓ....

(வாழ்க)

சந்தோச மாக நாமும் சந்தோசமாக...
நாமும் சந்தோசமாக.....
அழகான கைகளிலே கோல்கள் கொண்டு
பாடி நாங்கள்... ஆடுவோமே...
ஆடுவோமே அன்னையவள் செந்தமிழே வாழ்க என்று
ஆடுவோமே...

(வாழ்க)

என்ன இனிமை தமிழே என்ன இனிமை
தமிழே என்ன இனிமை
ஆசையிலே பெருமை பாடி ஆடுவோம் நன்றாய் ஆ... ஆ....
ஆடுவோமே... ஆடுவோமே....

(வாழ்க)

தமிழாலே இன்பமாம் தமிழேநம் செல்வமாம்
தமிழாலே எங்கள் வாழ்வு
தரணியிலே உயருமாம்
தமிழின்றி வாழாத தங்கமனம் எங்கள் மனம்
தமிழின்றி வீசாத தென்றல் எங்கள் தென்றலாம்
வாழ்க வாழ்க செந்தமிழாம் அன்னையவள்
பாதம் வாழ்க! வாழ்க வாழ்க

(வாழ்க)

எங்கள் இனம் உலகினிலே பழைய இனமே
என்று நாங்கள் பெருமை கொண்டு
இன்று ஆடோமோ ஓ... ஓ....
வாழ்க வாழ்க
வாழ்க வாழ்க எம்முயிராம் அன்னை தமிழ்
நீடு வாழ்க. வாழ்க வாழ்க....

(வாழ்க)

உ

செந்தா மரைக் குளங்கள்
செந்நெல் விளை நிலங்கள்
எந்நாளும் நிறைந் திருக்கும்
வன்னி நகர் - என்றும்
வந்தாரை வாழ வைக்கும்
வன்னி நகர்
(செந்தா...)

மாடுகள் பால் பொழியும்
மரங்களில் தேன் வழியும்
காடுகள் பழம் சொரியும்
வன்னி நகர் - தமிழ்ப்பண்
பாடுகள் மிகச் செறியும்
வன்னி நகர்.
(செந்தா...)

மான்மரை முயல் யானை
மந்திநரி பன்றி என
கான்நிறை மிருகங் கொண்ட
வன்னி நகர் - கல்வி
மான்களால் இனி நிறையும்
வன்னி நகர்
(செந்தா...)

மயில்களின் நடனத்துக்கு
வண்டுகள் யாழிசைக்கும்.
குயில்களின் கீதத்துக்கு
குருவிகள் தலையசைக்கும்.
திடலெங்கும் பொன்கொழிக்கும்
வன்னி நகர் - மக்கள்
உடலெங்கும் தேன்வியர்க்கும்
வன்னி நகர்.
(செந்தா...)

நெற்பயிரை அழைந்துவரும்
தென்றல் ஒரு கோடிபெறும்.
பொற்குவிய லாய்ஜொலிக்கும்
பூக்கள்பல கோடி பெறும்.
அலைகளில் கதிர் தெறிக்கும்
வன்னி நகர் தமிழ்க்
கலைகளில் மனம் பறிக்கும்
வன்னி நகர்
(செந்தா...)





உ

கார்கால மேகத்தைக்
கண்டு களிக்கின்ற
கார்த்திகைப் பொன்னெழில்ப் பூவே - நல்ல
நேர்த்தியாய் உள்ளவள் நீயே
(கார்கால)

ஆர்வருவார் என்று
ஆவலாய்ப் பார்க்கின்றாய்
அன்பர் அவர் வருவாரா - உன்
ஆசை தனைப் புரிவாரா
(கார்கால)

கண்ணைச் சிமிட்டாமல்
காலொன்றில் நிற்கின்றாய்
கடுந்தவம் தானோ உன் கோலம் - அந்தக்
கண்ணனின் மேலாஉன் தாபம்
(கார்கால)

மாலைப் பனியிலே
மஞ்சன நீராடி
மங்கை எனச் சிரிக்கின்றாயே - உன்மேல்
மாரன் கணைதொடுத் தானோ - எழில்
மாயன் கனவில்வந் தானோ
(கார்கால)

தென்றலில் வாடினாய்
தேன்மதி சுட்டதோ
தேவதையே எழில்ப் பூவே - உன்
தேவன் என்று வருவானோ உன்னைத்
தேடி அணைத்திடுவானோ.
(கார்கால)

வயல்ப்புறக் காட்டிலே
வரம்பெனும் மேட்டிலே
வனிதையே ஏனிந்தக் கோலம் உழவன்
வந்ததும் ஏனிந்த நாணம் - உன்னை
வாரி அணைத்தவன்
கூடுவ தில்லையே
வாடுதல் என்னடி ஞாயம் - இதழ்
கூடுதல் என்னடி லாபம்
(கார்கால)

நாளை ஒருநல்ல
வேளை வருமென்று
நலிந்து மெலிந்திடுவாரே - அந்த
ஏழையின் கற்பனை
வாழ்வே உனக்குமோ
என்செய்வாய் கார்த்திகைப் பூவே - இனி
மீண்டும் மலர்வாயா நீயே
(கார்கால)

உ

கண்களில் தெரிவதெல்லாம் கலைக்காட்சியோ இயற்கை
காட்டிடும் ஜாலமெல்லாம் பெருமாட்சியோ
மண்களில் மனிதமனம் செய்யும் ஆட்சியோ - காணும்
மாண்புகள் யாவுமதன் தனிச்சாட்சியோ
(கண்...)

மலைமகள் உடலிலென்ன பனிஆடையோ - காலைக்
கதிரவன் ஆடைதொட அதுநாணுமோ
தவழ்ந்திடும் மலையருவி முத்தாரமோ - அது
தந்திடும் ஓசையென்ன வித்தாரமோ
(கண்...)

வானம் தன்னழகைத் தினம்பார்க்குமோ கடல்
நீலம் வந்தவிதம் இதுமாயமோ
மேகம் பன்னீரைத் தெளித்தோடுமோ - மண்
தேகம் சிலிர்த்திடுமோ புல்லாகவே
(கண்...)

மேகக் கைகளினால் முகம்மூடுமோ - நிலவு
காமக் களிப்பில்வந்த சிறு நாணமோ
தாகக் களைப்பில்முகில் கடல்சேருமோ - கடல்
தந்ததை நன்றியென மழையாக்குமோ
(கண்...)

சோலையில் வண்டுவந்து இசைபாடுமோ - மலர்
சூடிய தென்றல் நின்று அதைக்கேட்குமோ
காலையில் மலர்களெல்லாம் கைகூப்புமோ - பூசைக்
காட்சியை அதுநமக்கு நினைவூட்டுமோ
(கண்...)







உ

விண்ணினைத் தழுவும் மலை
விழுந்திடும் மலை அருவி
பெண்ணினைப் போல மெல்லப்
பெயர்ந்திடும் முகில் இனங்கள்

எண்ணிலா இன்பந்தந்து
இதயத்தை நிறைத்து நின்று
கண்ணினை மயக்கும் என்றால்
கவி பிறக்காதோ - நல்ல
கற்பனையைத் தூண்டி நின்றால்
கவிதை வராதோ

மழலையில் சல சலக்கும்
மலைவளர் தேயிலைக்கு
இளந் தென்றல் அன்னையாகி
இரவு பகல் பாட்டிசைக்கும்.

இரவினைக் கண்டு நொந்து
இரங்கிடும் மலை மகட்கு
கதிரவன் கைகள் நீட்டிக்
கண்ணீராம் பனி துடைக்கும்.

வெண்முகிலை எடுத்து நல்ல
வெண்துகிலாய் உடுத்து மெல்ல
கண்நிறைக்கும் மலை அழகில்
கவி பிறக்காதோ நெஞ்சம்
கற்பனையில் ஊறி நிதம்
கவிதை தராதோ

உ

சலசலக்கும் ஓசையிலே
சந்தனச் செந் தென்றலிலே
கலகலக்கும் நெற்பயிரே சொல்லம்மா - நான்
சதுராட்டம் போடஎப்போ நாளம்மா

(சலசல...)

கன்னிப் பருவத்திலே
கால்கட்டுப் போட்டவர் யார்
என்னைக் கண்டால்கூட இந்த நாணமா - அன்று
ஏர்பூட்டி உழுதவனே நானம்மா

(சலசல...)

தென்றலுனைத் தாலாட்டும்
செவ்வானம் பாராட்டும்
செல்வமே வயல்நிறைந்த நெல்லம்மா - கவிதை
சொல்லுவேன் நீயிதனைக் கேளம்மா

(சலசல...)

பருவம் வாய்த்ததென்று
பாய்விரித்துப் படுக்கிறியே
பாவையுந்தன் நாணமெங்கே சொல்லம்மா - பலபேர்
பார்த்திருப்பார் ஞாயமில்லை நெல்லம்மா

(சலசல...)

நாளையுன்னை நான்மணப்பேன்
ராணியாக்கி வீட்டில் வைப்பேன்
அதுவரைக்கும் காத்திருப்பாய் நெல்லம்மா - கண்ணீர்
நெல்மணியாய்ச் சிந்தாதே போதுமா

(சலசல...)





உ

ஆண்: சேற்று வயல்க் காட்டினிலே
நாற்று நட வந்த பெண்ணே
நாற்று முடி தன்னை யெந்தன்
நெஞ்சி னிலே நட்டதேனோ

(சேற்று)

பெண்: ஏர்பதித்து நீ உழுதாய்
விழிபதித்து நான் உழுதேன்
உழுத வயல் காயலாமோ
உள்ள வயல் ஓயலாமோ

(சேற்று)

ஆண்: களைபறித்து நிமிரும் போது
கண்கள் உன்னைப் பறித்ததடி
முந்தானையைச் செருகும் போதெல்லாம்
முழுமனதும் உன்னை நாடுதே

(சேற்று)

பெண்: துன்பக்களை பறித்துவிட்டேன்
இன்பப் பயிர்வளர்த்து விட்டேன்
அன்பு என்னும் பயிர் வளர
ஆடி உன்னைத் தேடி வந்தேனே.

(சேற்று)

ஆண்: நெல்லோடு வளருதடி
நெஞ்சத்திலே காதல்ப் பயிர்
கல்லாமல் கற்றுவிட்டோம்,
காலம் வரும் காத்திரடி

(சேற்று)

பெண்: நெல்லு வயல் அறுவடையில்
நெஞ்சம் பொங்கி வழியுதையா
கதிரடிக்கும் காலம் வந்தாலே
கை இணைத்து சேர்ந்திடுவோம்

(சேற்று)

உ

எத்தனை கோடி இன்பங்கள் வைத்தாய்
இறைவா எங்கள் இறைவா இந்த
இயற்கை உன் பரிசல்லவோ இறைவா
எங்கள் இறைவா
(எத்தனை)

முத்தென நிலவு வீசி வரவே
மோகனம் வண்டுகள் பாட
இத்தரை மாந்தர் மனம் லயிக்கும்
இயற்கையின் அழகினிலே
(எத்தனை)

மலர்களில் வந்து தென்றலும் மோத
வண்டுகள் சிந்து பாடிடுமே
கலைகளின் அழகைக் கண்களிற் காட்டிக்
கலையினந் துள்ளி ஓடிடுமே
(எத்தனை)

மயில்களின் நடனக் கோலத்தைக் கண்டு
மணிக்குயில் கூவிப் பாடிடுமே
வெயில்க்கதிர் கடலின் அலைகளில் வீசி
விரித்திடும் ரத்ன தீபங்களே.
(எத்தனை)

புல்நுனி மேலே பனித்துளிக் கோலம்
புதுப்புது வர்ணம் காட்டிடுமே
நெல்மணி குனிந்து தென்றலில் அசைந்து
நிர்மலன் தாளை வணங்கிடுமே
(எத்தனை)

தாமரை மலர்கள் நிரம்பிய குளங்களின்
தரிசனம் பிறவியின் பரிசல்லவோ
சாமரை வீசிடும் அலைகளின் கரங்கள்
சரித்திரப் பெருமைகள் தருவனவோ
(எத்தனை)

கானத்து முல்லை வானத்தில் எழுந்த
காட்சியோ வானத்து மீனினங்கள்
வானத்து நாயகன் கார்த்திகை நாளில்
வரிசையாய் வைத்த தீபங்களோ
(எத்தனை)

மலைமகள் முகிலின் ஆடைகள் போர்ப்பது
மனதினை மயக்கிடும் காட்சியன்றோ
கலைமகள் ஆடை இதுவென அருவி
கரைபுரண் டோடுதல் மாட்சியன்றோ
(எத்தனை)





உ

உயர்ந்த மலைகள் நிறைந்த நாட்டில்
தாழ்ந்த வாழ்க்கையில் தடுமாறி
அயர்ந்து தூங்கும் மலையகமே நீ
அகிலம் வியக்க முன்னேறு
(உயர்ந்த...)

நாட்டின் வளத்தைக் காட்டும் தேயிலை
நாமே இங்கு உழைப்பாளி
வாட்டும் வறுமைத் தீயா என்றும்
வாழ்வில் எமக்குக் கூட்டாளி
(உயர்ந்த...)

நதிகள் ஓடும் முகில்கள் ஓடும்
நாமும் எங்கே ஓடுகிறோம்
விதியா சதியா விரட்டும் இருளில்
விடியும் ஒளியைத் தேடுகிறோம்
(உயர்ந்த...)

வசந்தம் இந்த மலைகளினூடே
வந்து வந்து மெருகேற்றும்
அசந்து தூங்கும் நிலையில் இருப்போம்
அறியோம் வசந்தம் எதுவென்று
(உயர்ந்த...)

மாலை வனங்களில் வண்டுகள் தூங்கும்
மறுநாட் காலை மதுவுண்ணும்
பாலை வனமாய் ஆனஎம் வாழ்வில்
பாலை வார்ப்பார் யாரிங்கு
(உயர்ந்த...)

மலையும் நதியும் மரமும் கனியும்
மண்டிக் கிடக்கும் நம்பூமி
கலையும் காலைப் பனிபோல் விலகும்
கவலைகள் இதுவே இனிநீதி
(உயர்ந்த...)

உ

ஊரெல்லாம் செழிக்க வேண்டும் தன்னானே - இந்த
உலகமெல்லாம் களிக்க வேண்டும் தன்னானே
உண்மை அன்பு உறுதி இந்த உலகிலே - நன்றாய்
ஓங்கிடவே வேண்டும் மிக விரைவிலே
(ஊரெல்லாம்)

பாடுபட்டுக் காடுவெட்டிப்
பக்குவமாய் விதைவிதைத்து
காவல் காத்துக் காத்திருக்கும் உழவனே - நீ
காணவேண்டும் இன்பவாழ்வு உலகிலே
(ஊரெல்லாம்)

மாடுபூட்டி ஏர்இழுத்து
மண்ணை வெட்டி வரம்பிழுத்து
நாடுவாழ வியர்வை சிந்தும் தோழனே உன்
நரம்பு தானே உலகின் நாடி நண்பனே
(ஊரெல்லாம்)

சேற்று வயலில் வியர்வை சிந்தி
தேசம் வாழ நெல் விளைத்து
போற்றுந் தொழில் புரியும் உண்மைத் தொண்டனே - பல
மாற்றங்களும் விளைந்த துன்னால் கண்டனே
(ஊரெல்லாம்)

வானம் பார்த்து மகிழ்ந்திடுவாய்
மானம் காத்து உயர்ந்திடுவாய்
தானதர்மம் செய்வதிலே உன்போல - இந்தத்
தரணியிலே யாருமில்லை என்பேனே
(ஊரெல்லாம்)

உழைத்திடுவோர் வாழவேண்டும்
உலகம் அவரை வாழ்த்த வேண்டும்
விளைச்சல் பெருகிப் பசியும் நீங்கிப்போனாலே - உலகில்
வீண்கலகம் நீங்கிவிடும் தன்னாலே
(ஊரெல்லாம்)





உ

ஆண்: வானம் கறுக்கப் போகுது பொன்னம்மா - எங்கள்
வயல்களெல்லாம் நிரம்பப் போகுது பொன்னம்மா
கானம் களிக்கப் போகுது பொன்னம்மா - எங்கள்
கழனியெல்லாம் கொழிக்கப் போகுது பொன்னம்மா
(வானம்)

பெண்: மயில்கள்எல்லாம் ஆடப்போகுது பொன்னையா - அதற்கு
மத்தளங்கள் போடப் போவது யாரையா
குயில்கள் இல்லை பாடல்பாடப் பொன்னையா - நாங்கள்
குரலெடுத்துப் பாடுவோமே பொன்னையா
(வானம்)

ஆண்: கார்கால மேகங்கள்பார் பொன்னம்மா - வானில்
கலைந்து போகும் நாரைகள்பார் பொன்னம்மா

பெண்: ஏர் உழுவன் முகங்களைப்பார் பொன்னையா - அவர்க்கு
நேர்உளதோ உவமை சொல்லப் பொன்னையா
(வானம்)

ஆண்: கார்த்திகைப்பூப் பூத்திருக்குது பொன்னம்மா - வரம்பில்
கதிர்கள் விழுந்து பாத்திருக்குது பொன்னம்மா

பெண்: வேர்த்தவேர்வை நெல்மணியாய் பொன்னையா - நன்றாய்
விளைஞ் சிருக்குது வயலினிலே பொன்னையா
(வானம்)

ஆண்: பாடுபட்ட உழவனுக்குப் பொன்னம்மா - இந்தப்
பாருலகு சொந்தமடி பொன்னம்மா

பெண்: கேடுகெட்டுப் போகலாமோ பொன்னையா - இந்தக்
கேள்வியத்தான் கேட்கிறோம்நாம் பொன்னையா
(வானம்)

உ

ஆண்: புத்தம் புது வருஷம்
பூரிப்பு நிறைஞ்சிருக்கு
அக்கம்பக்க மெல்லாவீடும்
கண்ணே கண்மணியே - என்கண்மணியே
எங்கும்
ஆனந்தம் நிறைஞ்சிருக்கு
பொன்னே பூச்சரமே - என்
பூச்சரமே.

பெண்: மரத்தில ஊஞ்சல் கட்டி
மடிநிறைய மகிழ்ச்சி கட்டி
புத்தாடை உடுத்துவரும்
கட்டா கட்டழகா - என் கட்டழகா
இந்தப்
புதுவரு சத்தப்பாரு
குங்குமப் பொட்டழகா - என்
பொட்டழகா
புதுவரு சத்தப்பாரு
குங்குமப் பொட்டழகா

ஆண்: வன்னி வவுனியாவே
வளமுள்ள வயல் வெளியே
தோகைமயில் ஆடும்மேடை
கண்ணே கண்மணியே என் கண்மணியே
எங்கும்
சோலைகளே நிறைஞ்சிருக்கு
பொன்னே பூச்சரமே - என்
பூச்சரமே
சோலைகளே நிறைஞ்சிருக்கு
பொன்னே பூச்சரமே

பெண்: மந்தி மரக்கிளையில்
மான் கூட்டம் திண்ணையிலே
சந்தி தெருக்களெல்லாம்
கட்டா கட்டழகா - என கட்டழகா
நல்ல
சங்கீதம் வண்டிசைக்கும்
குங்குமப் பொட்டழகா - என்
பொட்டழகா
சங்கீதம் வண்டிசைக்கும்
குங்குமப் பொட்டழகா





உ

ஆண்: தேயிலத் தோட்டத் துக்குத்
தெனந் தெனநீ போகயில
ஏங்கண்ணும் வருகுதடி
என்னென்னமோ பண்ணுதடி
(தேயிலத்...)

பெண்: கவ்வாத்து வேல செய்யக்
கண்ணு வேணுங் கொண்டுபோங்க
கத்திவெட்டிப் போடும் மச்சான்
கவனமுங்க ஆசை மச்சான்
(கவ்வாத்து...)

ஆண்: கொழுந்துக் கூடை சுமந்துகிட்டு
குடுகுடெண்ணு நடக்கிறியே
கொழுந்துக்கூடை போல நானும்
தொடந்திடட்டா பின்னாடியே
(தேயிலத்...)

பெண்: தொடந்து வந்தாத் தெரிஞ்சுபோகும்
தோட்டத்தில கதையாப் போகும்
அந்திநேரம் பீலிப் பக்கம்
ஆருமில்ல வாங்க மச்சான்
(தொடந்து...)

ஆண்: கொழுந்து மட்டும் இல்லப்புள்ள
மனசுங் கிள்ளிப் போடுறியே
முத்தலையை கலைக்கும் போது
எம்மனசைக் கலைச்சிடாத
(தேயிலத்...)

பெண்: மலையப் போல நெஞ்சுக்குள்ளே
நெறைஞ் சிருக்கு ஒனநெனப்பு
கலைக்க இந்த லயத்துக்குள்ள
மொளைக்க இல்ல யாரும்மச்சான்
(மலையைப்...)

உ

தைமாதம் பிறந்ததடி
தரணியெல்லாம் மலர்ந்ததடி
பொய்களவு கொலைகளெல்லாம்
தங்கமே தங்கம் - இனிமேல்
போயகலும் பூமியிலே
தங்கமே தங்கம்

(தைமாதம்)

காடுவெட்டி கழனியாக்கிக்
கலப்பைபூட்டி உழவுசெய்து
பாடுபட்ட உழவனுக்குத்
தங்கமே தங்கம் - இனிமேல்
பஞ்சமில்லை என்றுபாடு
தங்கமே தங்கம்

(தைமாதம்)

கரும்பிளநீர் வெட்டிவைத்துக்
காலை எழுந்து கோலமிட்டு
வரும் கதிரோன் மனம்மகிழத்
தங்கமே தங்கம் நாங்கள்
வரிசையாகப் பொங்கல் செய்வோம்
தங்கமே தங்கம்

(தைமாதம்)

உழவருக்குத் திருநாளாய்
உலகுக்கெல்லாம் பெருநாளாய்
தமிழருக்கு மகிழ்ச்சி தரும்
தங்கமே தங்கம் - பொங்கல்
தமிழைப் போல இனிக்குமடி
தங்கமே தங்கம்

(தைமாதம்)

மழைவெயிலை மாற்றங்களை
மண்ணில் தந்த சூரியனை
அழைக்கும் பானை பொங்கிவழிந்து
தங்கமே தங்கம் - பொங்கல்
அவர்க் கெமது நன்றிக்கடன்
தங்கமே தங்கம்

(தைமாதம்)

உலகம் வாழ வந்து கூடி
ஒற்றுமையாய் சிந்துபாடி
கலகம் நீங்க ஓடி ஆடித்
தங்கமே தங்கம் - நாங்கள்
கைகள் கோர்த்து நிமிர்ந்தெழுவோம்
தங்கமே தங்கம்

(தைமாதம்)

தமிழன் இந்த மண்ணில் வாழத்
தர்மநிலை தோன்றுமடி
சண்டை மாய்ந்து நமது நாட்டில்
தங்கமே தங்கம் -மக்கள்
சந்தோசம் கொள்வாரடி
தங்கமே தங்கம்

(தைமாதம்)





உ

வருக வருக புத்தாண்டே - எங்கள்
வாழ்வில் வளம் பெருக வருக
தருக தருக நலந்தருக - இந்தத்
தரணி மகிழ் வுறவே தருக

(வருக)

அறிவை அறியும் வழிஅறிய - இந்த
அவனி அதிலே வளம்நிறைய
அரிய அரிய கலைநலமெல்லாம் - எங்கும்
அசைந்து அசைந்து நடைபயில

(வருக)

நாளை நாளை எனும் நினைவினிலே - நாம்
நலிந்த நிலைமாறி உயர்ந்திடவே
ஏழை எளியவர்கள் வாழ்வினிலே - நல்ல
ஏற்றம் அடைந் தினிது வாழ்ந்திடவே

(வருக)

தூய்மை தூய்மை நிலை அடைந்திடவும் - கொடும்
துன்பம் துன்பத்திலே மூழ்கிடவும்
தாய்மை தாய்மையென ஓங்கிடவும் - இந்தத்
தரணி கருணையிலே தோய்ந்திடவும்

(வருக)

நான் நான் என்ற நினைவெல்லாம் - இனி
நாம் நாம் என்று மாறிடவே
மான் மான் என்ற மனநிலையில் - எங்கும்
மானம் பெரிதென்று சிறந்திடவே

(வருக)

உ

உறவுக்குக் கரங் கொடுப்போம்
உரிமைக்குக் குரல் கொடுப்போம்
உலகில் இன்று ஒலிக்கும் குரல் இதுவே - எந்த
ஊரவர்க்கும் இந்தக் குரல் பொதுவே
(உறவு)

தாயும் சேயும் என்றால் என்ன
தந்தை மைந்தன் என்றால் என்ன
வாயும் வயிறும் வேறு வேறு தானே - இந்த
வாக்கியத்தின் பொருளும் உண்மை தானே
(உறவு)

உழவனோடு பாடுபட்டு
உழுது மண்ணை வளப்படுத்தி
பழகும் நல்ல காளைமாடு வீட்டில் - அது
பச்சரிசி தின்பதில்லை நாட்டில்
வைக்கோல் கூடக் கொடுத்திடாது
வருத்தி அதை உழைக்கச் செய்து
வரும் பயனை தான் எடுத்து ஏய்த்தால் - அது
வளர்த்தவனை இடிக்க வரும் கோட்டால்
(உறவு)

ஒற்றுமையே மனித வாழ்வில்
உயர்வளிக்கும் என்பதனால்
வேற்றுமைகள் மறந்து மனிதர் சேர்வார் நல்ல
வியர்வை சிந்திப் பாடுபட்டுச் சோர்வார்.
உழைத்த பலனை அனுபவிக்க
உரிமை இல்லை என்று யாரும்
ஒதுக்கி அடக்கி ஆளநினைக்கும் போது - பெரும்
உரிமைக் குரல் உல கதிர்க்கும் பாரு
(உறவு)

காடுவெட்டி வீடுகட்டி
கல்லுடைத்து வேலைசெய்து
பாடுபட்ட ஏழைத் தொழிலாளி - அவன்
நாடு போற்றும் நல்ல உறவாளி.
கேடு கெட்ட மாந்தர் கொடுங்
கேவலமாய் அவன் உழைப்பை
கவர்ந்து அவன் உரிமைகளைப் பறித்தால் - இன்று
கிளம்பும் எரிமலைகள் பல வெடித்து
(உறவு)

மண்ணும் மதமும் மொழியும் கலையும்
மக்கள் வாழ்வில் உறவை வளர்க்கும்
என்னும் நினைப்பில் யாருமொன்றாய் இணைவார் - தம்
எண்ணம் சிறக்க கைகள் கோர்த்துப் பிணைவார்
கண்ணைப் போன்ற மொழியை மண்ணைக்
கவர நினைத்து சதிகள் புரிந்து
கயவர் கொடுஞ் செயல் புரிவா ரானால் - உடனே
கனன் றெழுந்து எரியும் நெருப்பாய் ஆவார்
(உறவு)





உ

இசைத்திட முடியாது எங்கள் பெருமை - தமிழ்
இன்பமோ சொல்லினிலே சொல்லல் அருமை
திசைதனில் எங்கள் மொழி செய்யும் புதுமை - இது
தேவர்க்கும் கடவுளர்க்கும் என்றும் இனிமை
(இசை...)

பக்தியின் மொழி தமிழாம்
பரவசந் தரும் புதிராம்
நித்தியம் வளம் பெருகும்
நிகரிலா மொழி தமிழாம்
(இசை...)

கம்பனும் வள்ளு வனும்
கவிஇளங் கோவுந் தந்த
செம்மை மிகு கவிதை
சிந்தை தனை நிறைக்கும்
(இசை...)

ஔவையின் அறி வுரைகள்
அருண கிரிப் புகழ்கள்
செவ்வை மிகு தமிழில்
சேக்கிழார் தரும் கவிகள்
(இசை...)

மூவர் தமிழ் அமுதும்
முடி மன்னர் ஆதரவும்
தேவர் களும் பருகும்
திருவா சகப் பொலிவும்
(இசை...)

நல்லூர் நா வலனும்
நல்ல விபு லானந்தனும்
பல்லோர் புகழ்ந் தேத்தும்
பாரதி வள்ள லாரும்
(இசை...)

தந்த தமிழ் எங்கள் தமிழ்
தங்கத் தமிழ் எங்கள் தமிழ்
(இசை...)

உ

தாயே தமிழே
தாள் பணிந்தே நான் வணங்குகிறேன் உன்
காலில் ஒலிக்கும்
சிலம்பின் ஜொலிப்பில்
கவலைகள் எல்லாம் மறக்கின்றேன்
(தாயே...)

குண்டலம் வளையும்
சிந்தா மணியும்
மேகலையோடு அசைவுறவே
கண்டனர் தமிழர்
கவலைகள் மறந்தார்
கன்னியுன் அழகில் தமை மறந்தார்
(தாயே...)

திருக்குறள் என்னும்
செங்கோல் ஏந்தித்
திசையனைத்தும் நீ அரசு செய்தாய்.
விருப்பொடு பத்துப்
பாட்டுக்கள் பாடி
எட்டுத் தொகையால் எழில் பெற்றாய்
(தாயே...)

வள்ளுவன் இளங்கோ
கம்பன் பாரதி
வரிசைகள் பலவும் நீ தந்தாய்
உள்ளம் உருக்கும்
பக்திப் பனுவல்கள்
உன்புகழ் கூறும் தமிழ்த் தாயே
(தாயே...)

ஔவை அருளிய
அறவழிச் செல்லும்
அன்னை தமிழே தாள் பணிந்தேன்
செவ்வை நெறிபல
உலகினுக் களித்தாய்
திசை தொறும் வாழிய செந்தமிழே
(தாயே...)





உ

அலைகடல் மணற் பரப்பு
ஆற்றின் புல் விரிப்பு
இலைகளில் தென்றல் தொட்டால்
எழுந்திடும் சிலு சிலுப்பு
(அலைகடல்......)

மலைமகள் முகில்க் குளிப்பு
மயில்களின் மனக் களிப்பு
கலையினம் நாணங் கொண்டால்
காட்டிடும் கண் சுழிப்பு
(அலைகடல்......)

பனிவிழும் மலர் இதழில்
பகலவன் கதிர்த் தெறிப்பு
இனிதெழும் நினை வினிலே
இரவினில் நில வெறிப்பு
(அலைகடல்......)

கனிதரும் மரச் செழிப்பு
கவிதரும் மனக் களிப்பு
புனிதமாம் குயிலின் கீதப்
புது ஒலி தரும் வியப்பு
(அலைகடல்......)

இன்பமோர் கோடி என்பார்
இதயத்தை மயக்கும் என்பார்
துன்பமாம் பசி நெருப்பில்
துடித்திடும் ஏழைக் கில்லை
(அலைகடல்......)

உ

மானுடனே உன் வாழ்வினை மறுபடி
மாற்றி அமைத்திட வாராய் - உன்
ஊனுடல் சுகம்பெற உள்ளமும் ஓங்கிட
ஒருவழி புதுவழி காண்பாய்
(மானுடனே)

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பாய்
என்றும் உழைத்திடல் செய்வாய் - ஒரு
கோழையாய் மற்றையோர் உழைப்பை உறிஞ்சிடும்
கொள்கையைக் கைவிட்டு உய்வாய்
(மானுடனே)

நேர்மையும், அன்பும் நெறியெனச் செல்வாய்
நீதியை உயிராய்க் கொள்வாய் - உன்
பார்வையில் என்றும் பொதுநலம் காண்பாய்
பாருல கோங்கும் மெய்யாய்
(மானுடனே)

பொய்யும் புரட்டும் நிறைந்தஇவ் வுலகைப்
புரட்டிப் புதிதாய்ப் படைப்போம் - இந்த
வையம் மகிழ்ந்து மகத்துவம் பெற்றிடும்
வாழ்வைச் சமமாய்ச் சமைப்போம்
(மானுடனே)

எல்லோரும் ஒன்று எல்லாமும் இன்று
எல்லோர்க்கும் பொதுவென்று கொள்வோம் - இனி
இல்லாமை இல்லாத இன்பத்தில் துள்ளி
இனிதான வாழ்வொன்று காண்போம்
(மானுடனே)

# இந்நூலாசிரியரின் நூல்கள்

* "செல்" "வா" என்று ஆணையிடாய். (அஞ்சலிக் கவிதைகள்)
* சேரர் வழியில் வீரர் காவியம் (குறுங்காவியம்)
* சமவெளி மலைகள் (அகளங்கன், சு. முரளிதரன் கவிதைகள்)
* வாலி (ஆய்வுநூல் – இருபதிப்புகள்)
  (அகில இலங்கை இலக்கியப்பேரவை, யாழ் இலக்கிய வட்டம் ஆகியவற்றின் சிறந்த இலக்கிய நூலுக்கான பரிசு 1987)
* இலக்கியத் தேறல் (கட்டுரைகள்)
* நளவெண்பா (கதை)
* அன்றில் பறவைகள் (நாடகங்கள்)
  (தேசிய சாகித்திய மண்டலப் பரிசு 1992)
* முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்
* இலக்கியச் சிமிழ் (கட்டுரைகள் – இருபதிப்புகள்)
* தென்றலும் தெம்மாங்கும் (கவிதைகள்)
* பன்னிரு திருமுறை அறிமுகம்.
* மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் (ஆய்வு)
* இலக்கிய நாடகங்கள் (நாடகங்கள்)
  வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப்பரிசு, கொழும்பு தமிழ்ச் சங்கப் பரிசு. 1994)
* ஆத்திசூடி (விளக்கவுரை)
* கொன்றை வேந்தன் (விளக்கவுரை)
* அகளங்கன் கவிதைகள் (கவிதைகள்)
  (வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு 1996)
* வாக்குண்டாம் (விளக்கவுரை)
* சிவபுராணம் (பொருளுரை)
* செந்தமிழும் நாப்பழக்கம் (பேச்சுக்கள்)
* நாமறிந்த நாவலர்.
* நல்வழி (பொழிப்புரை – விளக்கவுரை)
* இசைப்பாமாலை (இசைப்பாடல்கள்)